# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 163 நாள் : 29.09.2024

**பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டடக் கழிவுகளை ஒவ்வொரு மண்டலத்திலும் நிர்ணயிக்கப்பட்டுள்ள இடத்தில் மட்டுமே கொட்டிட வேண்டும். மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், கட்டட கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் சட்டவிரோதமாக பொது இடங்களில் கொட்டப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, இக்கழிவுகளை சேகரித்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள தனியார் லாரி உரிமையாளர்கள், தனிநபர்கள், தனியார் நிறுவனங்கள் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சியின் அங்கீகாரத்திற்குட்பட்டு அத்தையை கழிவுகளை பெருநகர சென்னை மாநகராட்சியால் இதற்கென ஒதுக்கீடு செய்து நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் எவ்விதமான கட்டணமுமின்றி இலவசமாகக் கொட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஒவ்வொரு மண்டலத்திலும் தலா ஒரு இடம் என கீழே குறிப்பிட்டுள்ள 15 இடங்கள் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன

மண்டலம் 1ல் வார்டு 7, பக்கிங்காம் கால்வாய் சாலை, சாத்தாங்காடு திருவொற்றியூர் (மண்டலம்-1 லாரி நிலையம் அருகில்)

மண்டலம் 2 ல் வார்டு 21, காமராஜர் சாலை, மணலி (மண்டல அலுவலகம் - 2 அருகில்)

மண்டலம்- 3 வார்டு 26 சி. எம் டி. ஏ டிரக் முனையம், இரவு காப்பகம் அருகில் (மாதவரம் பேருந்து நிலையம் பின்புறம்)

மண்டலம் -4ல் வார்டு 37 வடக்கு அவென்யூ சாலை, மகாகவி பாரதி நகர் வியாசர்பாடி.

மண்டலம்- 5ல் மற்றும் மண்டலம் 6ல் வார்டு 58 ,வார்டு 70, பழைய கால்நடை கிடங்கின் ஒரு பகுதி, அவதானம் பாப்பையா சாலை, சூலை (சென்னை மாநகராட்சிப் பள்ளி எதிரில்)

மண்டலம்- 7ல், வார்டு 91, கவிமணி சாலை (முகப்பேர் ஏரி திட்டம் ஒன்றாவது பிரதான சாலைக்கு எதிரில்)

மண்டலம்-8ல் வார்டு 101, செனாய் நகர் முதல் பிரதான சாலை, (கஜலட்சுமி காலனி அருகில்)

மண்டலம் -9ல் வார்டு 120, லாய்ட்ஸ் காலனி (சென்னை மாநகராட்சி ஐடிஐ அருகில்)

மண்டலம்- 10ல் வார்டு 127, குரு சிவா தெரு, எஸ்.எம்.பிளாக், ஜாபர்கான் பேட்டை கோடம்பாக்கம் (ஆர்- 10 , எம்.ஜி .ஆர் நகர் காவல் நிலையம் அருகில் )

மண்டலம்-11ல் வார்டு 155, நடராஜன் சாலை மற்றும் பாரதி சாலை சந்திப்பு (ராமாபுரம் ஏரி அருகில்)

மண்டலம்- 12ல் வார்டு158, நந்தம்பாக்கம் குப்பை மாற்று வாளாகம், அடையாறு நதிக்கரை அருகில்

மண்டலம் -13 ல் வார்டு 174, வேளச்சேரி பிரதானசாலை, குருநானக் கல்லூரி மற்றும் வேளச்சேரி மயான பூமி அருகில்

மண்டலம்- 14ல் வார்டு 186, 200 அடி ரேடியல் சாலை, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம்

மண்டலம்- 15ல் வார்டு 197, கங்கையம்மன் கோவில் தெரு விரிவாக்கம், காரப்பாக்கம் (தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் அருகில்)

விருப்பமுள்ள கட்டட கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை சேகரித்துக் கொண்டு செல்வதில் ஈடுபட்டுள்ள தனியார் லாரி உரிமையாளர்கள், தனிநபர்கள், தனியார் நிறுவனங்கள் கட்டடக் கழிவுகளை கொட்டுவதற்கான இந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட கழிவு சேகரிப்பாளர்களாகப் பதிவு செய்திட திடக்கழிவு மேலாண்மைத் துறைக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் .

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**